# கருஞ்சட்டைத் தமிழர்


ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

திங்கள் இருமுறை ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஆகஸ்ட் 10, 2026

Fortnightly E-paper ● August 10, 2026





## அமைதியான முகமும், அடக்குமுறைக் குணமும்!

சுப.வீரபாண்டியன்

### இரும்புக் கோட்டை தி.மு.க! தவிக்கிறது த.வெ.க!!

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

### மௌனம் கலைப்பாரா விஜய்?

தலையங்கம்

### “இயக்கப் பணியை இணைந்து செய்வோம்”

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

திங்கள் இருமுறை • திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஆகஸ்ட் 10, 2026 Fortnightly E-paper • August 10, 2026


# அமைதியான முகமும், அடக்குமுறைக் குணமும்!

சுப. வீரபாண்டியன்

தமிழ்நாட்டின் முதலமைச்சர் விஜய், சட்டமன்றத்தில் அமைதியாக அமர்ந்திருக்கிறார். ஊடகவியலாளர்களிடம் ஒரு நாளும் பேசுவதில்லை! இந்த அமைதிக்குப் பின்னால், ஒரு கடுமையான அடக்குமுறை ஒளிந்திருப்பதையும் பார்க்க முடிகிறது!





எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி அவர்கள், விவசாயிகளுக்கான ஆர்ப்பாட்டத்தில் பேசிய ஓரிரு வரிகளுக்காக, அடுத்த நாள் காலை அவர் சென்னையில் கைது செய்யப்படுகிறார்!

அவர் பேசியது தவறு என்று அரசு கருதுமானால், அவர் மீது ஒரு வழக்கு தொடர்ந்திருக்கலாம்! அதை விட்டுவிட்டு, அவரைக் கைது செய்து கடுமையான சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்கு தொடர்வது எந்த விதத்திலும் ஜனநாயகம் ஆகாது!

அந்தச் செயல் அரசாங்கத்திற்கு ஓர் எதிர் விளைவையே கொடுத்தது என்பதை நாம் கண்டோம்! சென்னையிலிருந்து தஞ்சை வரையில் அவரை அழைத்துச் சென்று, அவருக்குக் கூடுதல் புகழையும், திமுக தொண்டர்களிடையே ஓர் எழுச்சியையும் அந்த நிகழ்வு கொடுத்தது என்பதுதான் மிச்சம்!

அதனைத் தாண்டி, நீட் தேர்வை எதிர்த்துத் திராவிடர் கழகம் கடந்த 30ஆம் தேதி நடத்தவிருந்த இரு சக்கர வாகனப் பேரணிப் பரப்புரைக்குத் தமிழ்நாடு அரசு தடை விதித்தது, விமர்சனத்திற்குரிய அடக்கு முறையாகவே உள்ளது!

ஒரு பக்கம் பெரியார் திடலுக்குச் சென்று ஆசிரியரைச் சந்திப்பதும், மறுபக்கம் அவர்கள் நடத்தவிருந்த அமைதிப் பேரணிக்குத் தடை விதிப்பதும் மோசமான நாடகமாகவே இருக்கிறது!

திராவிடர் கழகம் பயங்கரவாத இயக்கம் இல்லை! அந்தப் பேரணியின் நோக்கமும், தமிழ்நாடு அரசுக்கு எதிரானது இல்லை! பிறகு ஏன் அந்தப் பேரணிக்குத் தடை?

ஒன்றிய அரசைக் கண்டு முதலமைச்சர் அஞ்சுகிறாரா அல்லது அவருடைய அடிப்படை அரசியலே ஆர் எஸ் எஸ் சார்புடையதா?

வேடம் போட்டவர்கள் வென்றதில்லை என்பதைத் தமிழ்நாட்டின் முதலமைச்சர் விரைவில் உணர்வார்!

•

# இரும்புக் கோட்டை தி.மு.க! தவிக்கிறது த.வெ.க!!

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

நடந்துமுடிந்தசட்டப்பேரவைத்தேர்தலில்மாற்றத்தைத் தரப் போகிறோம் என்று சொல்லி ஆட்சியைப் பிடித்தது த.வெ.க. அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற இந்த மூன்று மாதங்களில் முக்கியமானதொரு மாற்றம் நிகழ்ந்திருக்கிறது.தொலைக்காட்சிநெடுந்தொடரில்நீண்ட காலமாக நடித்துக் கொண்டிருந்த ஒருவர் மாறும் போது அதே கதாபாத்திரத்தில் இன்னொருவர் "இவருக்கு பதில் இனி இவர்" என்று சொல்லி அறிமுகப்படுத்தப்படுவார். அந்த வகையில் முன்னாள் முதல்வர் அம்மையார் ஜெயலலிதா அவர்களுக்கு பதிலாக முதல்வர் விஜய் அரசியல் அரங்கில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார். அவரது அரசியல் செயல்பாடுகளும் இம்மாற்றத்தை உறுதி செய்வதாகவே அமைந்துள்ளது.



அம்மையார் ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன் எதிர்க்கட்சியினரையும், தனது தனிப்பட்ட விரோதிகளையும் தொடர்ச்சியாகக்கைது செய்வதை வழக்கமாக வைத்திருந்தார். அதேபோல் விஜய் முதல்வர் பொறுப்பினை ஏற்றவுடன் தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்டனர். அனிதா ராதாகிருஷ்ணன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்படாமல் உடனடியாக அதே நாளில் விடுதலை செய்யப்பட்டார். மார்க்கண்டேயன் சிறையில் அடைக்கப்பட்டு பின்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் எ.வ. வேலு மற்றும் செந்தில் பாலாஜி ஆகியோரை கைது செய்ய த.வெ.க அரசு எடுத்த முயற்சிகளும் பலனளிக்கவில்லை. புதுப்புது வழக்குகளை பதிவு செய்த பின்னும் செந்தில் பாலாஜி அவர்களுக்கு நீதிமன்றம் அவ்வழக்குகளில் பிணை வழங்கியது. அதேபோன்று திமுக ஜென் சி இளைஞர்களான அறிவானந்தம், வினோத் சூர்யா போன்றவர்களை த.வெ.க அரசு கைது செய்ய முயன்ற போதும் நீதிமன்றம் அவர்களை சிறைக்கு அனுப்பாமல் பிணையில் விடுதலை செய்தது.

இதற்கெல்லாம்உச்சமாகசட்டப்பேரவையில்பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்குவதற்கு ஒரு நாள் முன்பாக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கர்நாடக அரசு காவிரியில் மேகதாது அணை கட்டும் விவகாரத்தில் மௌனமாக இருக்கும் த.வெ.க அரசைக் கண்டித்துத் திமுக தஞ்சையில் நடத்திய போராட்டத்தில் பேசும்போது பெண்களை இழிவுபடுத்திப் பேசியதாகக் கூறி த.வெ.க தஞ்சாவூர் மாவட்ட மகளிரணி நிர்வாகி பைரவி அளித்த புகாரின் பேரில் 9 பிரிவுகளின் கீழ் அவர்மீது தஞ்சாவூர் கிழக்கு காவல் நிலையத்தில் வழக்கு (வழக்கு எண் : 287 / 2026) பதிவு செய்யப்பட்டது.

அவ்வழக்கில் அவர் கைது செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில் தி.மு.க சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கினை தாக்கல் செய்தது. அதை பரிசீலித்த சென்னை உயர்நீதிமன்றம் நண்பகல் 12 மணி வரை அவரை கைது செய்ய தடை விதித்தது. ஆனால் த.வெ.க அரசோ உயர்நீதிமன்ற உத்தரவையும் மீறி உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்து விசாரணைக்காக தஞ்சாவூர் அழைத்துச் சென்றது.

வழக்கினை தொடர்ந்து விசாரித்த உயர் நீதிமன்றம் "உதயநிதி ஸ்டாலின் அவர்களை சிறைக்கு அனுப்பாமல் விசாரணைக்குப் பிறகு அன்றைய தினமே விடுதலை செய்ய வேண்டும்" என்று தீர்ப்பளித்தது. ஆயினும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஏறத்தாழ ஏழு மணி நேரத்திற்கும் மேலான பயணம் மூலம் அலைக்கழிக்கப்பட்டார். கூடுதல் பயண நேரம் ஏற்படும் வகையில் இடையில் பலமுறை வழித்தடங்கள் மாற்றப்பட்டது. இறுதியில் வழக்குப் பதிவு செய்யப்பட்ட தஞ்சாவூர் கிழக்கு காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லாமல் செங்கிப்பட்டி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விசாரிக்கப்பட்டார். இதற்கு சென்னையிலேயே ஏதேனும் ஒரு காவல் நிலையத்தில் அவரிடம் விசாரணை மேற்கொண்டிருக்கலாம்.

காவல் நிலைய பிணையில் விடுவிக்க இயலாத பிரிவுகளின் கீழ் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்த

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## மௌனம் கலைப்பாரா விஜய்?

கர்நாடகத்தில் மேகதாது என்ற இடத்தில் அணை கட்டத் தீவிரம் காட்டி வருகிறது அம்மாநில அரசு. அதற்கான நிதிக்காக ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் வரை போய்விட்டார் முதல்வர் சிவகுமார். அதுமட்டுமல்லாமல் அனைத்துக் கட்சிக் கூட்டத்தையும் கூட்டியிருக்கிறார் டில்லியில்.

தமிழ்நாடு முதல்வர் என்ன செய்கிறார்? என்ன செய்யப்போகிறார்? இவர் தமிழ்நாட்டின் விஸ்வகுரு. மோடியைப் போலப் பேசவே மாட்டார்?

"இங்கே வாருங்கள் பேசலாம்" அழைத்தார் கர்நாடக முதல்வர்சிவகுமார்."சரி"என்றுதலையாட்டினார்தமிழ்நாடு முதல்வர் விஜய். சிலநாள்களில் "வரவேண்டாம்" என்றார் சிவகுமார். "சரி" என்று அதற்கும் தலையாட்டிவிட்டார் விஜய்.

இதற்கிடையில் அரசின் நிலை தெரியாததால் மேகதாது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது திமுகழகம். இதைப் பார்த்து ஆர அமர நிதானமாக இப்போதுதான் நீதிமன்றம் போயிருக்கிறது தவெக அரசு.

சட்டமன்றத்திலும் இதற்கான விளக்கம் இல்லை, மக்கள் மன்றத்திலும் விளக்கம் கொடுக்க முதல்வரால் முடியவில்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தையும் கூட கூட்டவில்லை விஜய்.

தேர்தலுக்கு முன்பு 2,500 ரூபாய் தருவேன், 6 சிலிண்டர் தருவேன், கன்னியாகுமரியில் இருந்து சென்னை வரை பெண்களுக்கு இலவசப்பயணம் தருவேன், விவசாயிகளின் கடன்களை ரத்து செய்வேன் என்று தம்பட்டம் போட்ட விஜய், இந்த நிதிநிலை அறிக்கையில் அவைகளை இருட்டடிப்பு செய்துவிட்டார் என்பது அவரை அடையாளம் காட்டுகிறது, மக்களிடம்.

அதுபோலத்தான் மேகதாது அணை விவகாரத்திலும் தெளிவான முடிவு இல்லாமல் இருக்கிறது தமிழ்நாடு அரசு.

"நீரின்றி அமையாது உலகு" என்கிறார் திருவள்ளுவர்.

மேகதாது அணை - என்ன செய்யப்போகிறார் முதல்வர் விஜய்?

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி...

போதிலும், அவரை சிறைக்கு அனுப்பும் திட்டம் இல்லை என்றும் அவர் விசாரணைக்கு பின் உடனடியாக விடுவிக்கப்படுவார் என்றும் உயர்நீதிமன்றத்தில் அரசு தலைமை வழக்கறிஞர் தெரிவித்ததன் மூலம் அவர் மீது புனையப்பட்டது பொய் வழக்கு தான் என்பதை நாம் உணர முடிகிறது.

சர்ச்சைக்குரிய நடிகையின் பெயரை தனது உரையில் எந்த ஒரு இடத்திலும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிடாத நிலையிலும் அவர் மீது இவ்வாறான வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பது அரசியல் பழி வாங்கும் நடவடிக்கையே தவிர வேறொன்றுமில்லை.

த.வெ.க அரசு இது போன்ற கைது நடவடிக்கைகளில் நீதிமன்றத்தில் குட்டுக்குமேல் குட்டு வாங்கியது மட்டுமின்றி ஐந்து தொகுதிகளில் இடைத்தேர்தலுக்கு தடை, கரூர் அரசு பணி நியமனம், த.வெ.க எம். எல்.ஏவுக்கு லஞ்சம் தர முயன்ற குதிரை பேர புகார் என அனைத்து வழக்குகளிலும் தொடர்ச்சியாக தோல்வியையே தழுவுகிறது.

நெல்லிக்காய் மூட்டை போல் அ.தி.மு.க சிதறி அக்கட்சியினர் த.வெ.கவை நோக்கி வரும் நிலையில் தி.மு.க இரும்புக் கோட்டையாக நிற்பது த.வெ.க அரசுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது. அதனால்தான் இது போன்ற வழக்குகளின் மூலம் தி.மு. கவினரை வளைத்துவிடலாம் என்று எண்ணுகிறது த.வெ.க. ஆனால் தி.மு.கவோ இதுபோன்ற சலசலப்புகளுக்கு அஞ்சாமல் சட்டரீதியாக அவற்றை எதிர்கொள்ளும். அரசியல் அரிச்சுவடியே தெரியாத முதல்வர் விஜய் தி.மு.க எதிர்க்கட்சியாக இருந்து கொண்டே முதல்வராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்களை சிறைக்கு அனுப்பியது என்பதையும், அவருக்கு விதிக்கப்பட்ட நான்காண்டு சிறைத்தண்டனை அவரது மரணத்திற்கு பிறகும் உச்ச நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டது என்பதையும் இனியாவது அறிந்து கொள்ள வேண்டும். தனது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளை கைவிட்டு ஆக்கபூர்வமான அரசியலை மேற்கொள்ள வேண்டும்.

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ்த் தங்கும் உலகு" என்ற திருக்குறள் கூறும் "காதைக் குடையக்கூடிய கடுஞ்சொற்களையும்பொறுத்துக்கொள்கிறபண்பாளரின் அரசுக்குத்தான் மக்களிடம் மதிப்பு இருக்கும் " என்ற பொருளுக்கேற்ப இனியாவது முதல்வர் விஜய் நடந்து கொள்ள வேண்டும்.

# "இயக்கப் பணியை இணைந்து செய்வோம்"
# பொதுச்செயலாளர் அறைகூவல்!

திராவிட இயக்கத் தமிழர் பேரவை, 2007 ஜனவரி 22ஆம் நாள், சென்னை கலைவாணர் அரங்கத்தில் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டு, பேரவையின் அன்றைய பொதுச்செயலாளரும், இன்றைய தலைவருமான பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்களின் தலைமையில் பேரவையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறோம்.

நம் இனமானத் தலைவர் தந்தை பெரியார் அவர்களின் சமூகநீதி, சுயமரியாதைக் கொள்கைகளைத் தடுமாறாமல் ஏந்திக்கொண்டு, பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் பத்தொன்பது ஆண்டுகளை நிறைவு செய்துகொண்டு, இயங்கிக் கொண்டு இருக்கிறோம்.

இந்த பத்தொன்பது ஆண்டுகளில் மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், பேரணிகள், பரப்புரைகள், போராட்டங்கள், கருத்தரங்கங்கள், பயிற்சி வகுப்புகள் என இடைவிடாமல் நாம் இயங்கிக் கொண்டிருந்தோம் என்றாலும், இடையிடையயே சிறுசிறு தொய்வுகளும் இருக்கத்தான் செய்தது, ஆனால் நாம் துவண்டுவிடவில்லை.

## இளந்தலைவர் உதயநிதி கைதுக்காக பொதுச்செயலார் சிற்பி கைது!



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி அவர்களை, நீதிமன்ற உத்தரவையும் மீறி 04-08-2026 அன்று கைது செய்தது விஜய் தலைமையிலான தமிழ்நாடு அரசு. இளந்தலைவர் உதயநிதி கைதைக்கண்டித்துப் பல்லடம் நான்குமுனை சந்திப்பில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் பேரவைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராசு, பல்லடம் நகர திமுக செயலாளர் ராஜேந்திரகுமார், பேராசிரியர் படிப்பு வட்ட இணை ஒருங்கிணைப்பாளர் குட்டி பழனிசாமி, திமுக மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாலசுப்பிரமணியம், பல்லடம் ஒன்றிய திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் தங்கராசு உள்ளிட்ட 120 பேர் கைது செய்யப்பட்டு, மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

நம் பேரவைத் தலைவர் எழுதிய 'இதுதான் ராமராஜ்ஜியம்' என்ற நூலைக் 'கருஞ்சட்டைப் பதிப்பகம்' வெளியிட்டதை நாம் அறிவோம். அந்நூலில் அவர் அடையாளம் காட்டிய ராமராஜ்யத்தை, இந்திய ஒன்றியத்தில் நிறுவ ஆர்எஸ்எஸ் 100 ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிட்டு, அதற்கான வேலைகளைச் செய்து வருகிறது. பல்வேறு கட்சிகளை ஊடுருவியும், பிளந்தும், விலை கொடுத்து வாங்கியும் நாடாளுமன்றத்தில் தன்பலத்தைப் பெருக்கிக் கொண்டு இருக்கிறது பாஜக. அதேவேளையில் பாசிச, சர்வாதிகார வெறி அதன் பார்வையில் இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

டில்லிதான் அப்படி என்றாலும், தமிழ்நாடும் இன்று யார் ஆட்சியில் இருக்கிறது என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. சட்டப்படி நடிகர் ஜோசப் விஜய்தான் முதல்வர். ஆனால் அவர் சட்டமன்றத்திலும் மனந்திறந்து பேசமாட்டார், செய்தியாளர்களிடமும் பேசமாட்டார், அரசின் திட்டங்கள் என்ன? எப்படி நடைமுறைப் படுத்தப்பட இருக்கிறது என்று எதைப்பற்றியும் பேசாமல், ஒரு திரைமறைவில் இருக்கிறார் முதல்வர் என்பதே ஆபத்திற்கான அறிகுறியாகத் தெரிகிறது.

சொல்லப்போனால் பாஜகவின் ஆசைகள் நிறைவேறுகின்றன. தமிழ்நாட்டின் உரிமைகள் பறிபோகின்றன. எதிர்கட்சித் தலைவர் உதயநிதி அவர்கள் பேசாத ஒன்றைப் பேசியதாகச் சொல்லி ஆபாசத்தை அரங்கேற்றி கைது செய்யும் அளவுக்கு ஒரு சர்வாதிகாரம் தமிழ்நாட்டிலும் தலைதூக்கத் தொடங்கி உள்ளது.

தோழர்களே! சர்வாதிகாரம் நிலைபெற்றதாக வரலாறு இல்லை. மக்கள் சக்தி தோற்றதாகவும் வரலாறு இல்லை. நாம் நெருக்கடியான காலத்தில் இருக்கிறோம்.

திராவிட இயக்கம் தியாகத்தால் வளர்ந்த இயக்கம். திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் வழியும் அதுவாகத்தான் இருக்க வேண்டும்.

பேரவையின் துணைப் பொதுச்செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்களுடன் பேசுங்கள். மாவட்டச் செயலாளர்கள்தான் ஓர் இயக்கத்தின் வலிமையான தூண்கள். இன்றைய சமூக/அரசியல் சூழ்நிலையில் பேரவையின் செயல்பாடுகள் வேகமெடுக்க வேண்டும், வலிமை பெற வேண்டும்.

மாவட்டம் தோறும் ஒன்றிணைவோம்! திட்டமிடு வோம்! செயல்படுவோம்! கலந்துபேசுவோம்! தலைவர் சுபவீ அவர்களுடன் இணைந்து பணியாற்றுவோம்!

**சிற்பி செல்வராசு,**
**பொதுச்செயலாளர்.**